நம்முடைய மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, இப்பொருள்களை மாநில சுற்றுலா வாரியத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி, அதைப் பாதுகாத்து பலரும் கண்டுகளிக்கத் தக்க நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மத்திய அரசினுடைய தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதியில் எப்படி நடைபெறுகிறது என்பது குறித்து நமக்குத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கின்ற தகவலையொட்டி அவர்களுக்கு நாம் அறிவிப்புச் செய்து, அரசு தக்க பாதுகாப்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏற்பாடு செய்ய இயலும். நம்முடைய எல்லைக்குள்ளேயும் அப்படி இருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். அப்படி இருக்குமானால், உடனடியாக நம்முடைய மாநிலத்தினுடைய தொல்பொருள் ஆய்வுத் துறையின் ஆளுகைக்குக் கொண்டு வந்து பாதுகாக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், அந்தத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் பொறுப்பு என்னிடத்திலேதான் இருக்கிறது. ஆகவே உடனடியாக அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

பறவைகள், வனவிலங்குகள் சரணாலயங்கள்.

* 214. வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்** : மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற மேலவையில் 24-1-1986 அன்று வினா எண் 36-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

24—1—1986 அன்றுள்ளபடி, தமிழ் நாட்டில், வனத் துறையினால் அறிவிக்கப்பட்டுள்ள, பறவைகள் மற்றும் வனவிலங்குகள் சரணாலயங்கள் எவை, எவை ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :

(1) முதுமலை வனவிலங்குச் சரணாலயம் ;

(2) கோடியக்கரை வனவிலங்குச் சரணாலயம் ;

(3) ஆனைமலை வனவிலங்குச் சரணாலயம் ;

(4) முண்டந்துறை வனவிலங்குச் சரணாலயம் ;

(5) களக்காடு வனவிலங்குச் சரணாலயம் ;

(6) மூகுர்த்தி வனவிலங்குச் சரணாலயம் ;

(7) வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் ;

1986 ஏப்ரல் 28]

(8) வேட்டங்குடி நீர்பறவைகள் சரணாலயம்;

(9) பழவேற்காடு ஏரி பறவைகள் சரணாலயம்;

(10) கிண்டி தேசியப் பூங்கா.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இவ்வாறு அறிவிக்கப்பட்ட ஐந்து வன விலங்கு சரணாலயங்களையும், மூன்று பறவை சரணாலயங்களையும் எப்படியாவது சுற்றுலாத் துறையின் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்து, அனைத்து விலங்கு சரணாலயங்கள் உள்ள பகுதிகளையும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அறிவிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இந்தச் சரணாலயங்கள் எவையும் சுற்றுலாத் துறையின் பொறுப்பிலே இல்லை. சுற்றுலாத் துறையிலே வராது. காரணம், அகில இந்திய சட்டப்படி, பறவைகள் மற்றும் விலங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று அதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அதற்காக தனித் துறையே வைத்திருக்கிறார்கள். வனத் துறையிலேயும் தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய பொறுப்பிலே இந்தச் சரணாலயங்கள் இருக்கின்றன. சரணாலயங்களை சுற்றுலாத் துறையிலே எடுத்துக் கொண்டு, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்தது என்று அறிவிப்பதில்லை. நாளடைவிலே மக்கள் வந்து பார்த்து இந்தச் சிறப்பை எடுத்துச் சொல்வதன் மூலமாக, மக்கள் அங்கே வருகின்ற அந்தச் சூழ்நிலையையொட்டித்தான் அதற்குப் பெருமை கிடைக்கிறது. புகழ் சேர்கிறது. எந்த இடத்தையும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்று அறிவிப்பதில்லை.

(முற்பகல் 10-20)

ஆகவே அந்த வகையிலே சரணாலயங்களில் சில சரணாலயங்கள் மிகப் பெரிய அளவிலே உலக அளவிலே புகழ் பெற்றிருக்கின்றன. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், முதுமலை வனவிலங்குச் சரணாலயம் இன்னும் பல சரணாலயங்கள் வெளியிலே தெரிவிக்கப்படாமல் இருக்கின்றன, தெரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றன. அவைகளை எல்லாம் வெளியில் தெரிய வைப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளவாறு, வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தால், இந்த இடங்களுக்கு மக்கள் அதிகமாக வர விரும்பினால், சில இடங்களுக்கு வசதி குறைந்து இருப்பதால், நானும் முன்பு மேலவையில் எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். கேன்டின் வசதிகள், தங்க இடங்கள்

இல்லாத காரணத்தினாலேயே சிலர் செல்வதில்லை. எங்கெங்கெல்லாம் அத்தகைய வசதிகள் இல்லையோ அந்தந்த இடங்களிலேயெல்லாம் சுற்றுலாத் துறை இந்த வசதிகளை ஏற்படுத்தித் தந்தால், மக்கள் தாராளமாக அதிகமான அளவில் செல்வார்கள். அதற்குத் தக்க நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த வசதிகளைச் செய்வது என்கின்ற பிரச்சினையில் அடிப்படையிலே ஒரு சிக்கல் இருக்கின்றது. மக்கள் வருகை தந்ததற்குப் பிறகு, மக்கள் அதிகமாக வருகின்றார்கள். ஆகவே முதலீடுகளைச் செய்து வசதிகள் செய்வதா அல்லது முதலிலே முதலீடு செய்து வசதிகளைச் செய்து வைத்து விட்டு மக்களை அங்கே அழைப்பதா என்பது பிரச்சினை. வனத் துறையின் பொறுப்பிலே இந்தச் சரணாலயங்கள் இருக்கின்றன. அந்த விளம்பரங்களை எல்லாம் வனத் துறையும் சுற்றுலாத் துறையும் செய்துகொண்டிருக்கின்றன. அந்த விளம்பரங்கள் மூலம் ஈர்க்கப்பட்ட மக்கள் அங்கே வர ஆரம்பித்து, மக்களுடைய வருகை அதிகரித்த பிறகுதான் அந்த வசதிகள் செய்வது என்ற பிரச்சினை எழுகிறது. நீண்டகாலமாகப் புகழ்பெற்று இருக்கின்ற வேடந்தாங்கல் பறவை சரணாலயத்திலேகூட இப்போதுதான் அந்த அடிப்படை வசதிகள் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நம்முடைய முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு மிகப் பெரிய திட்டங்கள் வகுத்து அங்கே வசதிகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. அதுபோலவே மக்களுடைய செல்வாக்கு அதிகரித்து, வருகை அதிகமானதற்குப் பிறகுதான், இந்த அடிப்படை வசதிகளுக்காக முதலீடு செய்ய முடியும். அதிலே வனத் துறையும் சில முதலீடுகளைச் செய்கிறது. சுற்றுலாத் துறையும் சில முதலீடுகளைச் செய்து வசதிகளை ஏற்படுத்தித் தருகிறது. ஆகவே ஒன்றோடொன்று இணைத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, காலப்போக்கிலேதான் அந்த வசதிகளை நாம் ஏற்படுத்த முடியும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித்த பட்டியலிலே கோடியக்கரை வன விலங்கு சரணாலயங்கள் சில சிறப்பாக இருக்கின்றன என்றார்கள். விலங்குகள் பாதுகாப்பாக இருப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன ? அந்த வன விலங்குகளில் பல அழிக்கப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? பூநாரை இல்லம் என்றுதான் கோடியக்கரையிலே இருக்கக்கூடிய அரசு விடுதிக்குப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்

1986 ஏப்ரல் 28]

றது. அடுத்து, கோடியக்கரையிலே பூநாரை, சிறவி போன்ற பறவைகள் வந்து தங்குகின்றன. அங்கே சரணாலயங்கள் என்று இல்லாவிட்டாலும், அவைகள் வந்து அங்கே தங்குகின்ற காரணத்தினால், புதிய பறவை சரணாலயங்கள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, இது தமிழகத்திலே இருக்கின்ற சரணாலயங்களைப் பற்றிய கேள்வி. ஆகவே பொதுவாக இருக்கின்ற சரணாலயங்களைப் பற்றிய குறிப்புகளை வைத்திருக்கின்றார்கள். அதிலே கோடியக்கரை சரணாலயம் புகழ் பெற்ற சரணாலயம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், அவர்கள் விரும்புகின்ற மாதிரியில் பதிலைத் தரமுடியும். அதற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்ற யோசனைகளையும் வினாவின் மூலமாக அரசு பெற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அத முதுமலை வனவிலங்குகள் சரணாலயம் வருடாவருடம் தண்ணீர் தட்டுப்பாட்டினால் கோடை விடுமுறையில் மூடப்படுகின்றது. அங்கு நிரந்தரமாகத் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் செய்ய வழிவகை செய்தால், சுற்றுலாத் துறைப் பயணிகள் செல்வதற்கு வசதியாக இருக்கும். அந்த வசதி செய்து தரப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, இதுவும் தனிக் கேள்வி போடவேண்டிய ஒரு பொருள். ஆனாலும் சுற்றுலாப் பயணிகளைத் தடுப்பது ஏன் என்கின்ற கேள்விக்குப் பதிலை நான் தந்து விடுகிறேன். வறட்சி என்பது பொதுவாக மாநிலம் முழுவதும் ஏற்பட்டிருக்கின்ற வறட்சி. அங்கே சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டும்தான் தண்ணீர் பற்றாக்குறை என்பதல்ல. அங்கே வாழ்ந்துகொண்டிருக்கின்ற மிருகங்களுக்கும் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கின்றது. அதற்கு எவ்வளவோ முயற்சிகளைச் செய்து செயற்கையாக எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனாலும் அவர்களால் முழுமையாக அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. அது வேறு. தண்ணீர் இல்லாத நேரத்தில், கடுமையான வெயில் கொளுத்துகின்ற நேரத்தில், தீ பிடிக்கின்ற அபாயமும் இருக்கின்றது. எனவே அபாயகரமான சூழ்நிலையில் பொது மக்களை அனுமதிப்பது என்பது நாம் வம்பை விலை கொடுத்து வாங்குவதற்கு சமமாக ஆகிவிடும் என்ற காரணத்திற்காக மக்களுடைய தற்காப்புக்காக, முன் பாதுகாப்புக்காக இந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இயற்கை வரத்தைக் கொடுத்து மழையைப் பெய்து செழிக்க வைத்தால்தான், அதைத் தீர்க்க முடியுமே தவிர செயற்கையாக எவ்வளவு முயன்றாலும் தீர்ப்பது கஷ்டம்.